மாலை முரசு

பக்கங்கள் 21+6

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 06 வியாழக்கிழமை 22.08.2024 | அதிர்வு 21


## மரமொன்றில் தொங்கிய நிலையில் ஆணின் சடலம்

புத்தளம், கற்பிட்டி – அல்மனார் பகுதியில் வசித்த குடும்பஸ்தர் ஒருவர் காட்டுப் பகுதியில் உள்ள மரமொன்றில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். 04▶


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# வாக்காளர்களின் வாக்குரிமையை மீறினார் ரணில்!

## 5 நீதியரசர்கள் உயர் நீதிமன்றம் ஏகமனதாகத் தீர்ப்பு

## உள்ளூராட்சித் தேர்தலைத் தடுத்த வழக்கில் இன்று

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் முடக்கியதன் மூலம் நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் வாக்காளர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று உயர்நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் விஜித் மலலகொட, முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர, யசந்த கோத்தாகொட ஆகிய ஐவர் அடங்கிய ஆயம் இந்தத் தீர்ப்பை ஏகமனதாக வழங்கியது. 04▶

# சீன அரசின் பொருத்து வீடு பொருத்தும் திட்டம் ஆரம்பம்




(ந.லோகதயாளன்)

சீன அரசால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பொருத்து வீடுகளில் ஒன்று இன்று மன்னாரில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அலுவலகத்தில் பொருத்தப்படுகின்றது. 04▶

# நான் பொது வேட்பாளரை ஆதரிக்கவும் இல்லை; சுமந்திரன், சாணக்கியனை எதிர்க்கவும் இல்லை

## ஓய்வுபெற்ற மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் விளக்கம்



(கனகராசா சரவணன்)

"தமிழ்ப் பொது வேட்பாளருக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பூரண ஆதரவு என்று ஊடகங்களில் வெளிவந்த செய்தி மற்றும் நாடாளுமன்ற உறப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியனன் ஆகியோரைத் தவறாக நான் பேசியதாக ஊடகங்களில் வெளிவந்த செய்தி அனைத்தும் நான் தெரிவிக்காதமைக்கு உண்மைக்குப் புறம்பாகத் திரிவுபடுத்திப் பொய்யாக வெளியிடப்பட்டுள்ளன."

– இவ்வாறு ஓய்வுபெற்ற மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் வண. ஜோசப் பொன்னையா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, தாண்டவன்வெளி முதியோர் இல்லத்தில் இன்று வியாழக்கிழமை நடத்திய விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் ஓய்வுபெற்று தங்கியிருக்கும் நிலையில் என்னைப் பலர் வந்து சந்தித்துச் செல்கின்றனர். இந்தநிலையில் ஊடகவியலாளர்களும் வந்து என்னைச் சந்தித்துச் செல்கின்றனர்.

நான் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோருக்கு எதிராகவும் மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு பூரண ஆதரவாகவும் கருத்துத் தெரிவித்துள்ளதாகப் பொய்யான செய்திகள் வெளிவந்துள்ளன.

எனவே, நான் அவ்வாறு எதுவும் தெரிவிக்கவில்லை. நான் சொல்ல விரும்புவது இதுதான், எமது நாட்டில் சுதந்திரம் வேண்டும். எல்லோரும் சுதந்திரமாகவும் சமாதானமாகவும் வாழவேண்டும். அதற்காக யார் யாருக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டுமே அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கவும். முடியாதவர்கள் பேசாமல் விடுங்கள் என்றேன். இப்படி நான் சொன்னதைத் திரிவுபடுத்திப் பொய்யான செய்திகளை சில ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

எனக்கு விருப்பம் தமிழ் மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும், சமாதானமாக வாழ வேண்டும். அவர்கள் எப்படி வாழவேண்டுமே அப்படி வாழவேண்டும் என்பது எனது விருப்பம். அதனைத் தவறாகப் புரிந்து திரிவுபடுத்தி எனக்கு எதிராகப் பிரசாரம் செய்துள்ளனர்.

தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும் எனது விருப்பம். அதனை அன்றும் வலியுறுத்தினேன் இன்றும் அதனை வலியுறுத்துகின்றேன். எனவே, பொய் வதந்திகளை, பிரசாரங்களை நம்ப வேண்டாம்.

நான் அப்படி எதுவும் சொல்லவும் இல்லை, அப்படி எதுவும் விரும்பவும் இல்லை. தமிழ் மக்களின் விருப்பம் எதுவோ அதற்காகப் பாடுபட வேண்டும் என்பது எனது விருப்பம். அதனை நிறைவேற்றத்தான் குருவாக, ஆயராக இறைவன் என்னைத் தோர்ந்து எடுத்துள்ளார்.

நான் ஓய்வுபெற்றாலும் எனது நோக்கம் எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அதனை விடுத்து ஒருவருக்கு ஒருவர் பிரசாரம் செய்து பொய்யாக சொல்லி தவறான வழியில் செல்வதை நான் விரும்பவில்லை. அதனை எச்சரிக்கின்றேன். எதிர்க்கின்றேன்." – என்றார்.

# தென்னாபிரிக்கத் தூதரை சந்தித்தார் சிறீதரன் எம்பி.




இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் சாண்டில் எட்வின் ஷால்க், துணைத் தூதுவர் றெனி எவர்சன் வர்ணி ஆகியோருக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள தென்னாபிரிக்கத் தூதரகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் நிலைப்பாடு மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்த சாதகத் தன்மைகள் குறித்தும், ஈழத்தமிழர்கள் சார்ந்த அரசியல் முன்னெடுப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது, காசாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ள தென்னாபிரிக்கா, ஈழத்தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கும் சர்வதேச நீதியைப் பெற்றுத்தர முயற்சிக்க வேண்டும் என்றும், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரிலும் இது விடயம் சார்ந்து தங்களின் கரிசனையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், தென்னாபிரிக்கத்தூதுவரிடம்கோரிக்கைவிடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க துணிந்தது அவருக்கு நன்றியைச் செலுத்துவதற்காகவே!

## மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

எமது நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக வரக் கூடிய தகுதியும் தராதரமும் ஜனாதிபதி வேட்பாளர்களுள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே உள்ளது.

அதனால்தான் கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கத் துணிந்தேன்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா தனது நிலைப்பாடு பற்றி மக்களுக்கு ஆற்றி உரையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஜனாதிபதி தேர்தல் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகும் ஒன்றாகும். இந்தத் தேர்தலில் கட்சிக் கொள்கைகள் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும், அடுத்த பொதுத் தேர்தலில் நான் நாடாளுமன்ற உறுப்பினராக வருவேனோ இல்லையோ அதனை பின்னர் பார்ப்போம்.




சின்னா பின்னமாக மாறி சீரழிந்த எமது நாட்டை மீட்டு இன மத மொழி பேதமின்றி நாட்டு மக்கள் அனைவருமே சுதந்திரமாக தமது மார்க்க கடமைகளை நிறைவேற்றக் கூடிய நிலைமைக்கு இந்த நாட்டை கொண்டு வந்த பெருமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சாரும்.

ஈஸ்டர் தாக்குதல் மற்றும் கொவிட் 19 தொற்று காரணமாக உம்ரா மற்றும் ஹஜ் கடமைகளை நிறைவேற்றுவதில் முஸ்லிம் மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர் ஆனால் அந்த நிலமை இன்று மாறியிருக்கிறது.

அப்படியான சுமூகமான நிலையை ஏற்படுத்திய ரணில் விக்ரமசிங்கவுக்கு நன்றி செலுத்த மக்களுக்கு கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பமான ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாடாளுமன்ற பெரும்பான்மை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டு மிக குறுகிய காலத்தில் வீழ்ந்திருந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு மீண்டும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக தொடர மக்கள் ஆணையை பெறுவதற்காகவே இந்த தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக களம் இறங்கியுள்ளார்.

எனவே அவரை நன்றியுள்ள அனைவரும் ஆதரிக்க வேண்டும். - என்றார்.






# ஊடகத்துறையில் விருது!

(அபு அலா)

ஒருங்கிணைந்த தமிழர் பேரவை மற்றும் வெளிநாட்டில் வாழும் தமிழர் நலன்புரிச்சங்கம் இணைந்து நடத்திய கத்தார் தமிழன் விருது 2024 விழாவில் இலங்கை - அம்பாறை மாவட்ட மீனோடைக்கட்டைச் சேர்ந்த நியாஸ்தீன் பாத்திமா நிலோஜா என்ற இளம் ஊடக செயற்பாட்டாளருக்கு Media influencer என்ற விருது வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த தமிழர் பேரவை மற்றும் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நலபுரிச் சங்கம் இணைந்து வழங்கிய கத்தார் தமிழன் விருது விழா கடந்த 17 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட சித்ரா சீதாராமன், இலங்கை - மீனோடைக்கட்டைச் சேர்ந்த இளம் ஊடக செயற்பாட்டாளரான நியாஸ்தீன் பாத்திமா நிலோஜாவுக்கு Media influencer என்ற விருதை வழங்கி பொன்னாடையும் போர்த்தி கௌரவித்தார்.

இவ்விழாவில் கத்தாரில் நாட்டின் முக்கிய பிரமுகர்கள், தொழிலதிபர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மாகாண மட்டத்தில் செஸ் சம்பியன்

திருகோணமலை, கிண்ணியா அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் தரம் 3 இல் கற்று வரும் ஆக்கிஸ் ரயான் என்ற மாணவன் இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கத்தால் நடத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகள் தனிநபர் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்குபற்றி மாகாண மட்டத்தில் வெற்றியீட்டியுள்ளதோடு தேசிய மட்டப் போட்டிக்கும் தெரிவாகி இப்பாடசாலைக்கும் கிண்ணியா மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளார்.



பாடசாலை சமூகம் இந்த மாணவனுக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.

# ஓட்டமாவடியில் யுவதியின் சடலம்

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச் சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - பாலைநகர் பகுதியில் யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று வியாழக் கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

யுவதியின் சடலம் பிரேத பரிசோத னைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.



# எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊழியரை கத்தியால் வெட்டிக் காயப்படுத்திய கும்பல்

## நெல்லியடி பொலிஸ் நிலையம் முன்பாகக் கொடூரம்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், நெல்லியடி நகரில் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊழியரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கத்தியால் வெட்டி காயப் படுத்திய கொடூர சம்பவ இடம்பெற் றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஒரு வர் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

நேற்று இரவு 11 மணியளவில் நெல்லி யடி பொலிஸ் நிலையத்துக்கு முன் புறமாக உள்ள எரிபொருள் நிலையத் தில் இந்த வன்முறைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நெல்லியடி நகரிலுள்ள கூட்டு றவு சங்கத்துக்குச் சொந்தமான எரி பொருள் நிரப்பு நிலைய ஊழி யரே கத்தியால் வெட்டிக் காயப்படுத்தப் பட்டுள்ளார்.

கையில் காயமடைந்த அவர் பருத் தித்துறை ஆதார வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரண்டு இளைஞர்கள் எரி பொருள் நிரப்பு நிலையத்துக்குச் சென்று தகராறில் ஈடுபட்டுள்ளனர். இதன் போது, ஊழியரைத் திடீரென கத்தியால் வெட்ட ஆரம்பித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக சி.சி. ரி.வி. காணொளியை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் ஒருவர் கைது




செய்யப்பட்டார்.

பொலிஸ் நிலையத்தின் முன்பாக-வே வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர் கள் குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளமை பலரையும் அதிர்ச்சியடைய வைத் துள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சீன அரசின்...**

சீன அரசால் வடக்கு, கிழக்கு மீன வர்களுக்கென அன்பளிப்பாக வழங் கப்பட்ட 500 பொருத்து வீடுகள் வடக்கு, கிழக்கில் உள்ள 7 கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களங்களின் பொறுப்பில் களஞ்சியப்படுத்தப்பட்டுள் ளன.

களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள வீடு களில் இருந்து மன்னார் மாவட்டத் தில் ஒரு வீடு இன்று இலங்கைக் கடற் படையினர் மூலம் பொருத்தப்படுகின் றது.

தற்போது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையிலும் கடற் றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இன்று மன்னார் மாவட்டத்துக்கு நேரில் வருகை தந்துள்ள நிலையில் இந்த வீடு பொருத்தப்படு கின்றது.

சீன அரசால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 500 வீடுகளில் யாழ்ப்பாணம் மாவட்டத் தில் 116 வீடுகளும், கிளிநொச்சி, முல் லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் கல்முனை ஆகிய 6 கடற்றொழில் மாவட்டங்களுக்கும் தலா 64 வீடுகள் என்ற அடிப்படையிலும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

**வாக்காளர்களின்...**

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏனைய தேர்தல் களின் அட்டவணைகளைப் பாதிக் காத வகையில், உடனடியாக நடத்துவ தற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள் ளது.

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட தால் வாக்காளர்களின் அடிப்படை உரி மைகள் மீறப்பட்டுள்ளன என்றும் தீர்ப் பளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்தி வைப்பு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மற்றும் சுதந்திர மான மற்றும் நியாயமான தேர்தலுக் கான மக்கள் நடவடிக்கை உள்ளிட்ட பல கட்சிகள் தாக்கல் செய்த மனுக்களின் மீது இன்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு முதலில் உள்ளூராட்சி சபைத் தேர் தலை கடந்த வருடம் மார்ச் மாதம் 9 ஆம் திகதி திட்டமிட்ட நிலையில் பின்னர் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டு வருவதால் அரசு நிதிப் பற்றாக்குறையை மேற்கோள் காட்டி தேர் தலை நடத்தாத நிலையில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

நீதியரசர் காமினி அமரசேகர எழு திய தீர்ப்புக்கு ஏனைய நீதியரசர்கள் இணங்கி ஒப்பமிட்டுள்ளனர்.

**மரமொன்றில்...**

கற்பிட்டி - அல்மனார் பகுதியில் வசித்து வந்த எம்.ஆர்.எம்.பஸால் (வயது 37) எனும் இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


இந்தச் சம்பவம் தொடர்பில் கற் பிட்டி பொலிஸாருக்குத் தெரியப்படுத் தப்பட்டதுடன், சம்பவ இடத்துக்கு விஜயம் செய்த கற்பிட்டி பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

ஓட்டோவும், இரண்டு பாதணிகளும் சம்பவ இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள் ளன என்று பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

மேலும், சடலமாக மீட்கப்பட்டவரின் இரண்டு கைகளும் கட்டப்பட்டிருந்தன என்றும், இது கொலையா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் குறிப் பிட்டனர்.

கற்பிட்டி பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.எம். நாசிம் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து, அங்கு முதற்கட்ட மரண விசாரணையை நடத்தி, புத்தளம் மாவட்ட நீதிவானின் உத்தரவுக்கமைய சடலத்தைப் புத்தளம் தள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு உத்தர விட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இது நீதியான தீர்ப்பா?

அரசியல்வாதிகளின் - அதிகார வர்க் கத்தினரின் - வரம்பு மீறல்கள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், மக்கள் விரோத நடவடிக்கைகள், அடாவடித்தனங்கள், அட்டகாசங்கள் எல்லை மீறி வருகையில் அவற்றுக்கு எதிரான நீதித்துறையின் நடவடிக்கை வீச்சும் விரிந்து வருகிறது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் ஒன்றரை வருடங்களுக்கு மேல் இழுத் தடித்து வரும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு எதிராகவும், தேர்தல் ஆணைக்கு ழுவுக்கு எதிராகவும் தாக்கல் செய்யப் பட்ட அடிப்படை உரிமைகள் மனுக்களை ஒட்டி ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றம் காட்டமான தீர்ப்பு ஒன்றை இன்று ஏகமனதாக வழங்கி இருக்கின்றது.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலைக் காலம் தாமதியாமல் உடனடி யாக நடத்தும்படி நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருக்கின்றது.

வாக்காளர்களின் அடிப்படை உரி மைகள் இந்தத் தேர்தல் ஒத்திவைப்பின் மூலம் மீறப்பட்டுள்ளன என்று தீர்ப்ப ளித்துள்ள ஐந்து நீதியரசர்கள் ஆயம், இவ்விடயத்தில் நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியும் தேர்தல் ஆணைக்குழுவினரும் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறி உள்ளனர் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

மக்களின் வாக்குரிமையைப் பறித்தார் என்ற குற்றத் தீர்ப்பு ஒன்று நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றமான உயர் நீதி மன்றத்தினால் ஜனாதிபதிக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்தக் குற்றத்திற்கான தண்டனை ஏதும் விதிக் கப்படவில்லை.

தவறிழைத்தோருக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க நீதிமன்றத்தில் இன்னொரு தடவை விண்ணப்பிக்க வேண்டுமோ தெரியவில்லை.

ஆனால் மக்களின் வாக்குரிமையை ஒன்றரை, இரண்டு வருடங்கள் பறித்த பெரும் ஜனநாயக விரோதிகளுக்கு இந்த வழக்கில் தண்டனைத் தீர்ப்பு ஏதும் வழங்காமை இலங்கை நீதித் துறையின் வக்கற்ற போக்கையே அம்பலப்படுத்தி நிற்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த உள்ளூராட்சித் தேர்தல்களை, அதற்கான நிதி ஒதுக்கீட்டை வெட்டி ஏன் தடுத்தார் என்பது வெள்ளிடைமலை.

தாம் போட்டியிடும் ஜனாதிபதி தேர்த லுக்கு முன்னர் வேறு எந்தத் தேர்தலை நடத்தினாலும் தமது அரசியல் எதிர் காலத்துக்கு அது பாதகமாகிவிடும் என்ற தமது சொந்த அரசியல் லாபம் கருதியே மக்களின் ஜனநாயக உரிமையைஒ பறிக் கும் மோசமான அடாவடித்தனத்தில் அவர் இறங்கினார். அதனை இப்பத் தியிலேயே நாம் ஏலவே பல தடவைகள் சுட்டிக்காட்டி உள்ளோம்.

இந்த விடயத்தில் தனது தற்போதைய தீர்ப்பின் மூலம் உயர்நீதிமன்றம் இரண்டு விடயங்களை கவனியாமல் மேற் கொண்டு செல்கின்றது என்பதை சுட்டிக் காட்ட வேண்டியது நமது கடமையாகிறது.

ஒன்று-தமது அரசியல் சுயலாபத்துக்காக சுமார் ஒரு கோடி எழுபது லட்சம் வாக் காளர்களின் வாக்குரிமையைப் பறித்த ஒருவர், அதன் மூலம் அந்த அரசியல் லாபத்தை அடைந்து - தாம் செய்ய வேண் டியதை வெற்றிகரமாக செய்து - தாண்டிப் போகின்றார். தான் விரும்பும் தேர்தல் வரை உள்ளூராட்சித் தேர்தலை அவர் வெற்றிகரமாக நடத்த விடாமல் தடுத்து விட்டார். அது தொடர்பில், வெறும் அடிப்படை உரிமை மீறல் என்ற பிரகட னத்துடன் உயர் நீதிமன்றத்தின் பணி முடிந்து விடுவது ஆச்சரியமானது.

அடுத்தது - இந்தப் பெரும் தவறு இழைத்தவருக்கு எதிராகத் தண்டனை தீர்ப்பு எதும் வழங்கப்படவில்லை. நிதி அமைச்சர் என்ற ரீதியில் மக்களின் வாக்குரிமையை பறித்தவருக்கு எந்தத் தண்டனையும் விதிக்கப்படவில்லை.

மேலும், ஒரு தேசியமட்டத் தேர்தல் நடத்தப்படாதமை அடிப்படை உரிமை மீறல் என்று தீர்ப்பளிப்பதற்கு உயர் நீதி மன்றத்துக்கு ஒரு வருடத்திற்கும் கூடுத லான காலம் தேவைப்பட்டிருக்கின்றது.

மீண்டும் 'தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்' என்ற நீதித்துறையின் மகா வாக்கியத்தை கணக்கில் எடுக்காத நீதித்துறை செயல்பாடுதான் நாட்டில் சாத்தியமானதாக உள்ளது என்பது நிரூ பிக்கப்பட்டிருக்கின்றது.

மொத்தத்தில் இழைக்கப்பட்ட தவறின் மோசநிலைக்கு சரியான நிவாரணம் தரும் தீர்ப்பாக மக்கள் இதைக் கருதுவ தற்கு இந்த முடிவு தகுதியானது அல்ல என்பதுதான் உண்மை.

# விமானப்படை கல்விப் பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘எரோ பேஸ்’

(அபு அலா )

திருமலை சீனாக்குடா விமானப்படை கல்விபீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘எரோ பேஸ்’ (Aero Bash) 2024 நிகழ்வுகள் இன்று 22 ஆம் திகதி முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை சீனாக்குடா விமானப்படை வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

‘Aero Bash 2024’ கல்வி தொழில்நுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சியில் இலங்கை அரச பல்கலைக்கழகம்கள் தனியார் பல்கலைக் கழகங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வியாபார மற்றும் தொழில்நுட்ப கூடாரங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட உள்ளன.

இந்தக் கண்காட்சியில் இலங்கை விமான படையின் விமான சாகாசங்கள், விமானப்படை பரசூர் வீரர்களின் பரசூட் சாகசங்கள், விமானப்படை மோப்ப நாய்களின் சாகச நிகழ்வுகள், விமானப் படை மீட்பு குழுவினரின் விசேட மீட்பு நடவடிக்கை தொடர்பான காட்சிகள், மற்றும் அங்கம்புர மற்றும் தற்காப்பு கலை காட்சிகள், விமானப்படை பேண்ட மற்றும் அணிவகுப்பு குழுவினரின் விசேட காட்சிகள், இரவு நேர இசை நிகழ்ச்சிகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இந்த நிகழ்வில் உள்ளடங்குகின்றன.

இதன் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு புதிய அனுபவத்தை பெற முடியும். இந்த நிகழ்வுகள் தினந்தோறும் மதியம் 3 மணிக்கு ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்த நிகழ்வில் விசேடமாக இலங்கையின் முதல் முறையாக கிழக்கு மாகாணத்தில் டெண்டம் ஜம்ப் சாகச நிகழ்வும் இடம்பெறவுள்ளது.







# விழுதின் இளையோருக்கான வல்லமையைக் கட்டியெழுப்பல்

(பழுவூரான்)

போரால் பாதிக்கப்பட்டு, நலிவுற்ற சமூகங்களில் வாழும் சிறார்களின் உரிமைகளைப் பாதுகாத்து, மேம்படுத்தும் இளந்தளிர் அமைப்பின் ஐந்து வருட காலத் திட்டம். மட்டக்களப்பில் ஏறாவூர் பற்று செங்கலடிப் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தால் கடந்த வருடம் முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இதன் ஒர் அங்கமாக, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு மற்றும் புத்தளம் மாவட்டங்களில் சிறுவர் பிரதிநிதிகள் 480 பேரை உள்வாங்கி அவர்களின் ஆற்றல்களை சிறுவர் உரிமைசார் அணுகுமுறையின் ஊடாக மேம்படுத்தும் வகையில் நூற்றியிருபது இளையோர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கான செயற்றிறன் மிக்க பயிற்சிகள் குறிப்பாக நாடக ஆற்றுகை ஊடாக புத்தாக்கத் திறன்களை வளர்த்தல், சிறார்களை நெறிப்படுத்தும் வல்லமையைக் கட்டியெழுப்பல், உள-சமூக உணர்வுகளைச் சாதகமான வகையில் கையாளும் திறன்களை வழங்கல், இதன்வழி சிறுவர்களின் ஆற்றலை மேம்படுத்தி உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள இந்து இளைஞர் மன்ற முதியோர் இல்ல மண்டபத்தில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருஞானம் தர்மலிங்கத்தின் நெறிப்படுத்தலுடன் பயிற்சி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட இரு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 30 யுவதிகள் கலந்து கொண்டதோடு அவர்களுக்கான ஆரம்ப ஆற்றுகைத்திறன் உத்திகள், நுட்பங்கள், தளர்வுப் பயிற்சிகள் நடிப்பு ஒத்திகைள், சிறார்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மையப்படுத்திய எழுத்துருவாக்கம், காட்சி உருவாக்கம் மற்றும் பிரயோக பரீட்சார்த்தங்கள் எனப் பல விடயங்கள் பயிற்சியின் மூலம் வழங்கப்பட்டன.

இவர்கள் தாம் பெற்ற திறன்களைக் கொண்டு, சிறுவர்களை ஆற்றலுள்ளவர்களாக்கவும், திட்டப் பிரதேசங்களில் தலா 120 சிறுவர்களை இணைத்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஈகுவாலிட்டி கிளப் மூலமாக சிறுவர்களின் ஆற்றலை மேம்படுத்தவும், அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கவும், பொறுப்புள்ள பெற்றோராகவும் நட்புறவுள்ள பெற்றோராகவும், பெற்றோர்கள் அவர்களது கடமை பொறுப்புக்களை விளங்கிக் கொண்டு பிள்ளைகளைப் பராமரிக்கவும் வழிகாட்டுவார்கள்.

பிள்ளைகளுக்கு எதிராக ஏற்படும் சகல விதமான துஷ்பிரயோகச் சம்பவங்களைத் தடுக்கவும் நலன்களை உறுதி செய்யும் வகையில்சிறுவர் சார்ந்து பணியாற்றும் அரச அதிகாரிகளுடனும் சமூக மட்ட அமைப்புக்களுடனும் இணைந்து தமது திட்டத்தை முன்னெடுத்துச் செல்வார்கள்.

நிகழ்வில் விழுது நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர்கள், மற்றும் கண்காணிப்பு மதிப்பீட்டு ஆலோசகர் ஆகியோர் கலந்து கொண்டு, தமது காத்திரமான பங்களிப்பைவழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆயித்தியமலை சதாசகாயமாதா திருவிழாக் கலந்துரையாடல்!





(பழுவூரான்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு ஆயித்தியமலை சதாசகாயமாதா திருத்தலத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கலாநிதி யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 08 ஆம் திகதிவரை ஆயித்தியமலை புனித சதாசகாயமாதா திருத்தலத்தின் திருவிழா இடம்பெறவுள்ளது. விழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக ஆராயும் வகையில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.


இந்தக் கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

பெருவிழா கூட்டுத் திருப்பலி மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் அதி வந்தனைக்கு உரிய கலாநிதி பொன்னையா யோசப் ஆண்டகையினால் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

திருவிழாவுக்கான பாதயாத்திரை எதிர்வரும் செப்ரெம்பர் 07 திகதி காலை 5 மணிக்கு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் இடம்பெறவுள்ளது. திருப்பலியைத் தொடர்ந்து வவுணதீவு ஊடாகவும் மற்றும் செங்கலடி புனித நிக்கலஸ் ஆலயத்தில் காலை 5 மணிக்கு நடைபெறவுள்ள திருப்பலியைத் தொடர்ந்து கரடியனாறு ஊடாகவும் பாத யாத்திரை அன்னையின் திருத்தலத்தைச் சென்றடையவுள்ளது.

இதன் போது திருவிழாவுக்கான போக்குவரத்து, சுகாதாரம், குடி தண்ணீர் மற்றும் பாதுகாப்பு, மின்சாரம் வழங்கல் போன்ற விடங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது புனித சதாசகாய மாதா திருத்தல நிர்வாகி அருட்தந்தை ஜெரிஸ்டன் வின்சன்ட், மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம், உதவி மாவட்ட செயலாளர் ஜீ. பிரணவன், பொலிஸ் உயர் அதிகாரிகள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சுகாதார அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# கல்முனையில் நீலையூர் சுதாவின் ‘கொத்து வேலி’ கவிதை நூலறிமுகம்

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாண மீன்பிடி பணிப்பாளர் சி. சுதாகரன் (நீலையூர் சுதாவின்) ‘கொத்து வேலி’ கவிதை நூல் அறிமுக விழா நாளை மறுதினம் 24 ஆம் திகதி சனிக்கிழமை, காலை 10 மணிக்கு உவெஸ்லி இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயத்தில் முன்னாள் அதிபர் வ. பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை ‘76 சி’ நண்பர்கள் வட்டத்தினதும், கல்முனை வடக்கு கலாச்சார பேரவையினதும் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுராா்ச்சிதானந்த ஜீ மகராஜ் கலந்து ஆசி வழங்குவார்.

முதன்மை அதிதியாக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தியில் ஒரு சகாப்த காலத்துக்கு மேல் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவரும், கவிஞரும் எழுத்தாளருமான வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரனும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.



# கவனிப்பாரற்றுக் கிடக்கும் அண்ணா சனசமூக நிலையம்!

(வி.ரி. சகாதேவராஜா)

துறைநீலாவணை தெற்கு முதலாம் வட்டாரத்தில் அமைந்திருக்கும் அண்ணா சனசமூக நிலையம் நாளுக்கு நாள் தூர்ந்து பாழடைந்து வருகிறது.

இதில் சமூகம் வெறுக்கும் சட்ட விரோத செயற்பாடுகளுக்கு களம் அமைய வாய்ப்புள்ளது.

1986 ஆம் ஆண்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் பூ.கணேசலிங்கத்தின் நிதி உதவியோடு கட்டியெழுப்பப்பட்ட இக் கட்டடம் அன்று சில பத்திரிகைகளோடு வாசிகசாலையாக திறம்பட இயங்கி வந்தது.

களுதாவளை மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் இந்தச் சனசமூக நிலையம் உள்ளது.

இடை நடுவில் நாட்டுச் சூழல் காரணமாக வன்முறை காலகட்டத்தில் கட்டடம் பாதுகாப்பு காவலரண் போன்று செயற்பட்டும் வந்தது .அதன் காரணமாக அது பாழடைய ஆரம்பித்தது.

இன்று மோசமான நிலையிலேயே கூரையும் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது.

கதவுகள், ஜன்னல்கள் அகற்றப்பட்ட நிலையில் பாழடைந்து வருகிறது. ஆடு, மாடுகள் உறையும் இடமாக மாறியுள்ளது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள இந்தக் கட்டடத்தைப் புனரமைக்க சுமார் 40 லட்சம் ரூபா தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் பூ.நவரெத்தினராசா தெரிவித்தார்.

எனவே இந்தக் கட்டடத்தைப் புனரமைத்து இந்த பகுதி வாழ் மக்களுக்கு உரிய சேவையை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி அமைப்பாளர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று தலைவர் பூ. நவரெத்தினராசா வேண்டுகோள் விடுக்கிறார் .





# பாடசாலை மாணவருக்கு சுகாதார விழிப்புணர்வு

(றிஸ்வான் சாலிஹூ)

உலக இளைஞர் தினத்தை முன்னிட்டு அட்டாளைச்சேனை முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) கல்வி பயிலும் மாணவர்களுக்கு அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்த போதைப் பொருள் தடுப்பு, சிறுவயது திருமணம் மற்றும் திறன் அபிவிருத்தி தொடர்பான சுகாதார விழிப்புணர்வு அண்மையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.எல்.எம்.பாயிஸ் தலைமையில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு இந்த விடயம் தொடர்பான விழிப்புணர்வை வழங்கினார். இந்த நிகழ்வில் இந்தப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.சீ.றவுப், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுகளை அகற்றும் திட்டம் மருதமுனையில்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கனேடிய அரசின் நிதி அனுசரணையில் 'இனங்களுக்கிடையே நட்புறவு ஒன்றியம்' ஏற்பாடு செய்திருந்த பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளை சேகரித்து அகற்றும் வேலைத் திட்டம் நேற்று முன்தினம் (20) மருதமுனை கடற்கரைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில் இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான கனடா உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ், அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்திக அபேவிக்ரம, கல்முனை மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம் ஆகியோர் அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இவ்வேலைத் திட்டத்துக்கு கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் விசேட அறிவுறுத்தலின் பேரில் கல்முனை மாநகர சபையும் ஒத்துழைப்பு வழங்கியிருந்தது.

கடல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளை பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் அற்ற தூய பிரதேசங்களாக மாற்றுகின்ற இந்த முன்னோடி வேலைத் திட்டத்தில் மூவினங்களையும் சேர்ந்த இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.

இதன் மூலம் பெருந்தொகையான பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுகள் வெற்றிகரமாக சேகரித்து அகற்றப்பட்டுள்ளன.












# பாலஸ்தீன விரோதப் போக்கில் ஆஸ்திரேலிய எதிர்க்கட்சி!

## தமிழ் அகதிகளுக்கு இரக்கம் காட்டாத பீட்டர் டட்டன்!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

கொடும் போர் நிலமாக மாறியுள்ள காசாவிலிருந்து வரும் பாலஸ்தீனியர்களை ஆஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்படக் கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் தெரிவித்துள்ள கருத்து வெறுக்கத்தக்கதுடன் பல அரசியல்வாதிகளும், ஊடகவியலாளர்களும் கண்டித்து விமர்சித்துள்ளனர்.

பாலஸ்தீன அகதிகள் தடை

போரில் இருந்து தப்பி வரும் பாலஸ்தீனிய அகதிகளை தடை செய்ய கோரிய ஆஸ்திரேலிய எதிர்கட்சித் தலைவர் பீட்டர் டட்டனின்ீநவநச னுரவவழ) பேச்சுக்கு நாடளாவிய ரீதியில் கண்டனங்கள் எழுந்துள்ளன.

அதேவேளை 7,000 பாலஸ்தீனர்களின் விசா விண்ணப்பங்களை நிராகரித்த ஆஸ்திரேலிய அரசு, இஸ்ரேலியர்களுக்கு வரவேற்பு கொடுக்கும் வகையில் பலருக்கு விசாவினை ஆளும் அரசு வழங்கியுள்ளது எனும் தகவல்களும் வெளியாகி உள்ளன.

காஸாவில் நடந்து வரும் போரில் ஆயிரக் கணக்கான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். போரின் கொடுமையால் பலர் அகதிகளாக மீள்குடியேற பல நாடுகளுக்கு விசாவுக்கு விண்ணப்பித்து வருகின்றனர்.

ஆயினும் ஆஸ்திரேலிய விசாவுக்காக பாலஸ்தீனியர்கள் செய்த விண்ணப்பங்கள் பெரும்பாலும் நிராகரிக்கப்படுவதாக சமீபத்திய அறிக்கைகள் கூறுகின்றன.

ஆனால், அதே நேரத்தில் இஸ்ரேல் குடிமக்களுக்கான ஆஸ்திரேலிய விசா விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

### நாடாளுமன்றில் பாரிய சலசலப்பு

காசா அகதிகள் விசாக்கள் தொடர்பான பீட்டர் டட்டனின் நிலைப்பாட்டால் ஆஸி நாடாளுமன்றத்தில் பாரிய சலசலப்பு ஏற்பட்டது. குறிப்பாக காசா அகதிகளை அனுமதிப்பதன் மூலம், தொழிலாளர் கட்சி நாட்டைப் பாதுகாப்பற்றதாக மாற்றியதாக எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்து குற்றம் சாட்டி உள்ளார்.

1976 லெபனான் உள்நாட்டுப் போரின் பின்னர், லெபனான் அகதிகளை ஆஸ்திரேலியாவுக்குக்

தொடர்ச்சி▼






# பாலஸ்தீன விரோதப் போக்கில் ஆஸ்திரேலிய எதிர்க்கட்சி!

தொடர்ச்சி▲

கொண்டு வந்து பெரும் தவறு செய்ததற்காக மால்கம் பிரேசரின் அரசை கடுமையாக விமர்சனம் செய்தார்.

அதேவேளை இனவெறியை நிறுத்துங்கள் என்று பீட்டர் டட்டனிடம் சுயேச்சை எம்பி ஜூலி ஸ்டெகல் கூறியதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் கடுமையான மோதல் வெடித்தது.

பீட்டர் டட்டன் இனவெறி மற்றும் நாட்டைப் பிளவு படுத்துகிறார் என்று ஜூலி ஸ்டெகல் குற்றம் சாட்டினார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்களாக, போரால் பாதிக்கப்பட்ட காசாவில் இருந்து வெளியேறும் பாலஸ்தீனியர்களை நிராகரிக்குமாறு அவர் விடுத்த அழைப்பால் எதிர்க்கட்சித் தலைவர் பலத்த கண்டனங்களை எதிர்கொண்டார்.

காசாவில் இருந்து விசா விண்ணப்பங்களை தற்காலிக இடைநிறுத்ததுக்கு எதிர்க்கட்சி அழைப்பு விடுத்துள்ளது. திருப்தி அடையும்வரை சரியான பாதுகாப்பு சோதனைகள் இருக்க வேண்டும் என்று தெளிவுபடுத்தக் கோரியுள்ளது.

ஆனாலும் முன்னாள் கூட்டணி அரசின் கீழ் ஏற்பட்ட அதே செயல்முறைகளை அரசும் ஏ.எஸ்.ஐ.ஓவும் பின்பற்றுவதாக தொழிற்கட்சி வலியுறுத்தியது. மேலும் எதிர்க்கட்சி தேசிய பாதுகாப்பு முகமைகளைக் குறைமதிப்புக்கு உட்படுத்துவதாக குற்றம் சாட்டியது.

### இஸ்ரேலுக்கு ஆதரவா?

இஸ்ரேலுக்கு ஆதரவளிப்பது போல் 7,000 பாலஸ்தீனர்களின் விசா விண்ணப்பங்களை ஆஸ்திரேலியா தற்போது நிராகரித்துள்ளது. அரச அறிக்கையின்படி, 10,033 பாலஸ்தீனியர்கள் ஆஸ்திரேலிய விசாவுக்கு விண்ணப்பித்துள்ளனர். இவற்றில் 2,922 விசாக்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 7,111 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

போரில் இருந்து தப்ப பல பாலஸ்தீனர்களும் ஆஸ்திரேலிய விசாவுக்கு விண்ணப்பித்துள்ளனர். ஆனால் அந்த விண்ணப்பங்களை ஆஸ்திரேலியா தொடர்ந்து நிராகரித்து வருகிறது.

ஆயினும் இஸ்ரேலிய குடிமக்களின் 235 விசா விண்ணப்பங்கள் மட்டுமே நிராகரிக்கப்பட்டு, 8,646 விசா விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

### தமிழ் அகதிகளை தடுத்தவரும் இவரே!

இலங்கையில் இருந்து அகதிகளின் படகுகள் ஆஸ்திரேலியா வரமுயல்வதற்கு தொழில்கட்சியின் இயலாத கொள்கைகளே காரணம் என லிபரல் கட்சியின் தலைவரும் தற்போதய எதிர் கட்சியின் தலைவர் பீட்டர் டட்டன் முன்பு தெரிவித்திருந்தார்.

கடந்த காலங்களில் ஆஸ்திரேலியாவுக்கு அதிகளவில் இலங்கையில் இருந்து தமிழ் அகதிகளின் படகுகள் வருவதற்கு ஆளும் தொழில்கட்சி அரசே காரணம் என்று லிபரல் கட்சியின் தலைவர் பீட்டர் டட்டன் முன்பு குற்றம் சாட்டியிருந்தார்.

கடந்த பல வருடங்களாக ஆஸ்திரேலிய எல்லை பாதுகாப்பு படையினரும் இலங்கை கடற்படையினரும் பல படகுகளை தடுத்து நிறுத்தியுள்ளனர். இப்பிரச்சனை அரசாங்கத்திற்கு குறிப்பிடத்தக்க பிரச்சினை ஆகும். ஆனால் இந்த பிரச்சினைக்கு அவர்களே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல காலமாகவே இலங்கையில் யுத்தம், பொருளாதார சமூககுழப்பங்களால் அகதிகளாக பெருமளவு மக்கள் வெளியேறினர். ஆயினும் யுத்தம் 2009இல் முடிவடைந்த பின்னரும் இலங்கையில் அரசியல் குழப்பநிலை தொடர்கிறது.

அகதிகளின் தொடர் வருகையானது அரசு இறைமையுள்ள எல்லைகள் என்ற நடவடிக்கையை கைவிட்ட

தொடர்ச்சி▼





# பாலஸ்தீன விரோதப் போக்கில் ஆஸ்திரேலிய எதிர்க்கட்சி!

தொடர்ச்சி▲

மையே பல படகுகள் வரமுயற்சிப்பதற்கு காரணம், தற்போதய அரசு தாங்களும் இறைமையுள்ள எல்லைகள் நடவடிக்கையை தொடர்வதாக தெரிவிக்கின்ற போதிலும் அதனை கைவிட்டுவிட்டது எனவும் பீட்டர் டட்டன் சுட்டிக்காட்டினார்.

**தமிழ் அகதிகளுக்கு இரக்கம் காட்டவே கூடாது!**

ஒகஸ்ட் 2018 இல் இலங்கை அகதிகளுக்கு இரக்கம் காட்டவே கூடாது என அப்போது ஆஸ்திரேலிய உள் துறை அமைச்சரான பீட்டர் டட்டன் கூறிய கருத்துக்கள் பெருமளவில் கண்டிக்கப்பட்டது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து படகு மூலம் பிரவேசிக்கும் ஏதிலிகளுக்கு இரக்கம் காட்டவே கூடாது என்று, ஆஸ்திரேலியாவின் உள்துறை அமைச்சர் பீற்றர் டட்டன் அப்போது தெரிவித்திருந் தார்.

இந்தோனேசியாவில் இருபது ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள், ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் செல்வதற்கு காத்திருக்கின்றனர் எனக் கூறிய அக்கால உள்துறை அமைச்சர் பீற்றர் டட்டன், இவ்வாறான சூழ்நிலையில், மானஸ்தீவில் உள்ள 20 ஏதிலிகளுக்கு இரக்கம் காட்டி அவர்களை அவுஸ்திரேலிய மண்ணுக்கு அழைத்துவருவது மிகப்பெரிய ஆபத்தான தீர்மான மாகும் எனத் தெரிவித்திருந்தார்.

அவர்களுக்கு இரக்கம் காட்டினால் மீண்டும் இலங்கை போன்ற நாடுகளில் இருந்து ஏதிலிகள் அவுஸ்திரேலியா நோக்கி பிரவேசிக்க ஆரம்பித்து விடுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**நடேஷ் - பிரியா குடும்பம்**

30 ஒகஸ்ட் 2019இல் ஆஸ்திரேலியாவில் இருந்து தமிழ்க் குடும்பம் ஒன்று நாடு கடத்தப்படுவதற்காக, வலுக்கட்டாயமாக இலங்கை செல்லும் விமானத்தில் ஏற்றப்பட்டு விமானமும் புறப்பட்ட நிலையிலும் ஆஸ்தி ரேலிய நாட்டின் மனிதாபிமான செயற்பாட்டாளர்கள் போராடி நாடுகடத்தலைத் தடுத்தமை பலருக்கும் நினைவிருக்கும்.

2018 ஆண்டு மார்ச் மாதம் அதிகாரிகள் இந்தக் குடும்பத்தை அவர்களின் குயின்ஸ்லாந்து வீட்டில் இருந்து பலவந்தமாக வெளியேற்றியபோது அவர்க ளுக்கு ஆதரவான குரல்கள் ஆஸ்திரேலிய நாடு முழுவதும் எதிரொலித்தன.

அவர்கள் அகதிகள் அல்ல என்று கூறி இவர்கள் வெளியேற்றப்படுவதற்கு ஆதரவான அரசின் நிலைப பாட்டுக்கு பின்னர் அகதிகள் அங்கீகாரம் கிடைத்தது.

நம் நாட்டின் மூலம் பாதுகாப்பைப் பெறுவதற்கு அவர்கள் உரியவர்கள் அல்லர் என்று உள்ளூர் ஊடகங்களிடம் அப்போதய உள்துறை அமைச்சர் பீட்டர் டட்டன் தெரிவித்திருந்தார்.

அடைக்கலம் கோரி அந்தக் குடும்பம் விடுத்த விண் ணப்பம் குடியேற்றத் துறை அதிகாரிகளால் விரிவாக ஆராயப்பட்டு நிராகரிக்கப்பட்டது என அவர் கூறியி ருந்தார்.

அடுத்தடுத்து செய்யப்பட்ட மேல்முறையீடுகளிலும் கணவன் மனைவிக்கும், மூத்த குழந்தைக்கும் அளிக் கப்பட்ட அடைக்கலக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. ஆயினும் பலத்த கண்டனங்களுக்கு உள்ளான இவ்விடயம், இறுதியில் 2022 இல் குடியுரிமை வழங் கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

# அரசியலுக்காகப் பொய் சொல்லி மக்களை ஏமாற்றப் போவதில்லை!

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் தௌபீக் எம்.பி.

(அபு அலா )

எமது நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்து எழுந்து கொள்ள முடியாத ஒரு காலகட்டத்தில் மிக முக்கி யமான ஜனாதிபதி தேர்தல் ஒன்றை எதிர்நோக்கியிருக்கிறோம்.

அரசியல் வரலாற்றில் அதிக வேட் பாளர் போட்டியிடும் ஓர் தேர்தலாக இது காணப்படுகிறது. வழமைக்கு மாறாகப் பலத்த போட்டியும் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்தத் தேர்த லில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஊழல் மோசடியற்றவரும், மக்கள் செல்வாக்கைப் பெற்ற ஓர் தலைவரா கவும் சஜித் பிரேமதாஸ மாத்திரமே காணப்படுகிறார்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஊட கங்களுக்கு கருத்து தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக் கையில்,

இனம், மதம் மற்றும் மொழி வேறு பாட்டுகளைப் பார்த்து வாக்களிக்கக் கூடிய தேர்தலல்ல இத்தேர்தல். நாம் அனைவரும் நாட்டு நலனை மையப் படுத்திய சிந்திக்க வேண்டும். அப் போதுதான் நாம் எம் இலக்குகளை அடையலாம்.

மூவின மக்களும் சந்தோசமாக நிம்மதியாக வாழக்கூடிய நாட்டை உருவாக்குவதே இப்போதைய தேவை யாக இருக்கிறது. இதனை நாட்டு மக்க ளும் அறிந்துள்ளார்கள். அதனை ஏற்படுத்துவதற்கான ஓர் தலைமையை உருவாக்குவதற்கான தேர்தலாகவே இந்தத் தேர்தலை நாம் பார்க்கவேண்டி யிருக்கிறது. அந்த தலைமைக்கு தகுதி யானவர் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ என்பதை முழு நாடும் அறிந்துள்ளது.

தற்போது நாட்டில் எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை இல்லாமல் போனாலும் நாடு இன்னும் பொருளா தார ரீதியில் முன்னேற்றம் அடைய வில்லை. எரிபொருள், எரிவாயு, மின் சாரம், நீர்கட்டணம் மற்றும் உணவுப் பொருள்களின் விலைகள் இன்னும் பழைய நிலைக்கு முழுமையாக வர வில்லை. அனைத்து கட்சிகளும் இணைந்தே சர்வதேச நாணய நிதியத் தின் ஒத்துழைப்புடன் நாட்டில் வரிசை யுகத்தை இல்லாமல் செய்தோம். இதற்கு தனிப்பட்ட எவரும் உரிமைகொள்ள முடியாது என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள்.

எமக்கு இப்போது தேவை சர்வே சத்தில் நன்மதிப்பை பெற்ற, ஊழல் இல்லாத ஓர் ஜனாதிபதியே. அதற்கு தகுதியானவர் சஜித் பிரமதாஸ மாத் திரம்தான் சர்வதேச நாடுகளும் அவரது அரசுக்கு உதவுவதற்குத் தயாராக இருப்பதாகவும் அரசியலுக்கு பொய் சொல்லி மக்களை ஏமாற்ற வேண்டிய எந்த தேவையும் எனக்கில்லை.- என்றார்.




# தேசிய காங்கிரஸின் 20 ஆவது பேராளர் மாநாடு

## மீண்டும் தலைவராக அதாவுல்லா



தேசிய காங்கிரஸ் கட்சியின் 20 ஆவது பேராளர் மாநாடு கட்சியின் தேசியத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல். அதாவுல்லா தலைமையில் அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் நடைபெற்றது.

அதில் கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் கட்சியின் நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. அதன் போது மீண்டும் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவராக ஏ.எல்.அதாவுல்லா தெரிவானார்.






# நெடுந்தீவு உதைப்பந்தாட்டம் ஈகில் எய்ட் அணி சம்பியன்!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

நெடுந்தீவு உதைபந்தாட்ட லீக் ஒழுங்கு செய்திருந்த உதைபந்தாட்ட லீக் தொடரில் ஈகில் எய்ட் விளையாட்டுக் கழகம் கரிகாலன்சேனை விளையாட்டுக் கழகத்தினரை2:0என்றகோல்கணக்கில் வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தையும் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் பெற்றுக் கொண்டனர்.

நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கரிகாலன் சேனை விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தைப்பெற்று ஒரு லட்சம் ரூபா பணப் பரிசையும் வெண்புறா விளையாட்டுக்கழகம் மூன்றாம் இடத்தைப் பெற்று 50 ஆயிரம் ரூபா பணப் பரிசையும் பெற்று கொண்டனர்.






# அறுகம்பேயில் அரைமரதன் ஓட்டம்; சுற்றுலா பயணிகளும் பங்கேற்றனர்!






(றியாஸ் ஆதம்)

அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்து நடத்திய அறுகம்பே அரை மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் அவிசாவளையை சேர்ந்த விமல் காரியவசம் முதலாமிடத்தையும், வெலிமடயை சேர்ந்த ரீ.டபள்யூ.ரத்னபால இரண்டாமிடத்தையும் டென்மார்க்கை சேர்ந்த பெஸ்டியன் குலோஸ்கோ மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டார்.

பெண்கள் பிரிவில் கென்யாவைச் சேர்ந்த அனிக்கா பேலிம் முதலாமிடத்தையும் ஜேர்மனியைச் சேர்ந்த டீ.அனிக்கா டோன் இரண்டாமிடத்தையும், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சஸாலி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டார்.

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டு அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்து நடத்திய அறுகம்பே அரை மரதன் ஓட்டப்போட்டி பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் இடம்பெற்றது.

மரதன் ஓட்டப்போட்டியானது 21.1 கிலோ மீற்றர் அரை மரதன், 10கிலோ மீற்றர் மற்றும் 5 கிலோ மீற்றர் என மூன்று பிரிவுகளாக இடம்பெற்றது. 5கிலோ மீற்றர் போட்டியில் சிறுவர்கள் மாத்திரம் கலந்து கொண்டனர். ஏனைய இரு பிரிவுகளிலும் ஏனையோர் கலந்து கொண்டனர்.

இதன்போது 10 கிலோமீற்றர் மரதன் போட்டியின் ஆண்கள் பிரிவில் வெலிமடையை சேர்ந்த டீ.எம்.எரந்த தென்னகோன் முதலாமிடத்தையும், மகியங்கனையை சேர்ந்த கே.எம்.சரத்குமார் இரண்டாமிடத்தையும், நுவரெலியாவை சேர்ந்த எம்.சௌந்தரராஜன் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டார். பெண்கள் பிரிவில் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த பெல்லா றுஸல் முதலாமிடத்தையும், றீஸ்கா கிஸ்ஜெஸ் இரண்டாமிடத்தையும் இஸ்ரேல் நாட்டை சேர்ந்த டெஃப்னா டென்போமா மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

சிறுவர்களுக்கான 5 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் கே.றினோஸ் முதலாமிடத்தினையும் எம்.ரீ.எம்.இன்ஷாப் இரண்டாமிடத்தையும், என்.அனீஸ் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டார்.

அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் இஸட்.எம்.ஹாஜித் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகவும், இராணுவத்தின் 242 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் களன அமுனுபுர, பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம்.உவைஸ், பெடிவே உல்லாச விடுதியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பொறியியலாளர் பீ.சப்றாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட பலர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இந்த மரதன் போட்டியில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்குப் பணப் பரிசில்களுடன் பதக்கம் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. அறுகம்பே அபிவிருத்தி போரம் 6 ஆவது தடவையாக நடத்திய இந்த மரதன் போட்டியில் உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் என 260 பேர் கலந்து கொண்டனர்.




குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# நல்லதே நடக்கும் வெற்றி நிச்சயம்!

## கட்சிக் கொடிக்கு வரலாறு உள்ளது முதல் மாநாட்டில் அதற்கான விளக்கம்

### த.வெ.க. தலைவர் விஜய் தெரிவிப்பு

**"இவ்வளவு நாள் நமக்காக உழைத்தோம். இனி தமிழ் நாட்டு மக்களுக்காக உழைப்போம். தமிழ்நாட்டு மக்களுக்காகவும், தமிழ்நாடு வளர்ச்சிக்காகவும் உழைப்போம். சந்தோஷமா, கெத்தா நம் கட்சிக் கொடியை ஏற்றிக் கொண்டாடுவோம். எல்லோரும் நம்பிக்கையோடு இருங்கள். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்." என விஜய் தெரிவித்துள்ளார்.**

தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி அறிமுகம் செய்யும் நிகழ்வு இன்று காலை பனையூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கட்சித் தொண்டர்கள் மற்றும் விஜயின் தாய், தந்தை எனப் பலர் கலந்துகொண்டனர்.

கொடியை அறிமுகம் செய்த பின்னர் விஜய் உரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில்,

"இன்று சந்தோஷமாக உள்ளது. எனது அரசியல் பயணத்தை பெப்ரவரியில் தொடங்கி, கட்சியின் பெயரை அறிவித்தேன். கட்சியின் கொடியை அறிமுகப்படுத்தியது பெருமையாக உள்ளது. நம் எல்லோருக்கும் இது ஒரு சந்தோஷமான நாளாக அமைந்துள்ளது. நம் கட்சிக் கொடிக்கு பின்னணியாக ஒரு வரலாற்றுக் குறிப்பு உள்ளது. அதை பின்னர் தெரிவிக்கிறேன்.

கொடியில் இடம்பெற்றுள்ள படங்களின் விளக்கத்தை முதல் மாநில மாநாட்டில் தெரிவிக்கிறேன். முதல் மாநில மாநாடு எப்போது நடைபெறும் என்பது விரைவில் அறிவிக்கப்படும். இவ்வளவு நாள் நமக்காக உழைத்தோம். இனி தமிழ் நாட்டு மக்களுக்காக உழைப்போம். தமிழ்நாட்டு மக்களுக்காகவும், தமிழ்நாடு வளர்ச்சிக்காகவும் உழைப்போம். சந்தோஷமா, கெத்தா நம் கட்சிக் கொ–டியை ஏற்றி கொண்டாடுவோம்.

இது கட்சிக்கொடி அல்ல. வருங்கால தலைமுறையினருக்கான வெற்றிக் கொடி. முறையாக அனுமதி பெற்று, தொண்டர்கள் அவரவர் இல்லத்தில் கட்சிக் கொடியை ஏற்ற வேண்டும். அனைவரிடமும் தோழமை பாராட்டி உரிய அனுமதி பெற்று கொடியை ஏற்றிக் கொண்டாடுங்கள். எல்லோரும் நம்பிக்கையோடு இருங்கள். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்."

– இவ்வாறு அவர் பேசினார்.

## தமிழக வெற்றிக் கழகத்தின் உறுதிமொழி

"நமது நாட்டின் விடுதலைக்காகவும். நமது மக்களின் உரிமைகளுக்காகவும் தமிழ் மண்ணில் இருந்து தீரத்துடன் போராடிஉயிர்நீத்தஎண்ணற்றவீரர்களின் தியாகத்தை எப்போதும் போற்றுவேன்.

நமது அன்னைத் தமிழ் மொழியைக் காக்க உயிர்த்தியாகம் செய்த மொழிப்போர் தியாகிகளின் இலக்கை நிறைவேற்றும் வகையில் தொடர்ந்து பாடுபடுவேன்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும், இறையாண்மை மீதும் நம்பிக்கை வைத்து, அனைவருடன் ஒற்றுமை. சகோதரத்துவம், மதநல்லிணக்கம். சமத்துவம் ஆகியவற்றைப் பேணிக் காக்கின்ற பொறுப்புள்ள தனிமனிதராகச் செயல்படுவேன். மக்களாட்சி, மதச்சார்பின்மை. சமூக நீதிப் பாதையில் பயணித்து, என்றும் மக்கள் நல சேவகராகக் கடமை ஆற்றுவேன் என உறுதி அளிக்கின்றேன்.

சாதி, மதம், பாலினம், பிறந்த இடம் ஆகியவற்றின் பெயரில் உள்ள வேற்றுமைகளைக் களைந்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அனைவருக்கும் சம வாய்ப்பு. சம உரிமை கிடைக்கப் பாடுபடுவேன். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற சமத்துவக் கொள்கையை கடைப்பிடிப்பேன் என்று உளமார உறுதி கூறுகின்றேன்."

## கொடி, பாடல் அறிமுகம்

தமிழக வெற்றிக் கழகத்தின் உறுதிமொழி எடுத்த பிறகு கட்சியின் கொடியை விஜய் அறிமுகம் செய்து வைத்தார். அதன் பின்னர். கொடிக்கம்பத்தில் தயாராக இருந்த கொடியை விஜய் ஏற்றி வைத்தார்.

கொடி சிவப்பு – மஞ்சள் வண்ணங்களில், 2 போர் யானைகள், வாகை மலருடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பின்னர் கட்சியின் பாடல் அறிமுகப் படுத்தப்பட்டது. இந்தப் பாடலுக்கான வரிசைகளை, கவிஞர் விவேக் எழுத, தமன் இசையமைத்துள்ளார்.



# மருந்து ஆலையில் தீ 17 பேர் உயிரிழப்பு

ஆந்திராவில் மருந்து ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்துள்ளனர். காயமடைந்தவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆந்திரப் பிரதேசத்தின் அனகாபள்ளி மாவட்டத்தில் அச்சுதாபுரம் பகுதியில் உள்ள சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் மருந்து தொழிற்சாலை ஒன்று செயல்பட்டு வருகின்றது. இதில், நேற்று 200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டு வந்தனர்.

அப்போது மதிய உணவு நேரத்தின் போது மருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தால், அங்கிருந்த பொருட்கள் அனைத்தும் தீப்பிடித்து எரிந்தன. இந்தத் தீ விபத்தில் சிக்கி 17 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த 20இற்கும் மேற்பட்டோருக்கு வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

ஆந்திர பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு இதுகுறித்த உயர் மட்ட விசாரணைக்கு அறிவுறுத்தியுள்ளார். சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினரை அவர் இன்று சந்திப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

# தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம்: இன்று மாலை அறிவிப்பு?



தமிழக அமைச்சரவையில் இன்று மாற்றம் செய்யப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எதிர்வரும் 27ஆம் திகதி அமெரிக்கா செல்லவுள்ள நிலையில், தமிழ்நாடு அமைச்சரவையில் பெரிய அளவில் மாற்றம் செய்யப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

3 மூத்த அமைச்சர்கள் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, புதியவர்களுக்குப் பொறுப்பு வழங்கப்படவாய்ப்புள்ளது எனத் தகவல் வெளியாகியது.

இந்நிலையில், அமைச்சரவை மாற்றம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு இன்று மாலை வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது.



## சுனிதா, வில்மோர் பூமி திரும்புகையில்

# ஆபத்து!

**ஒக்சிஜன் பற்றாக்குறை ஏற்பட்டு சிக்கக்கூடும்**

**வளிமண்டலத்துள் நுழைதல் தோல்வியடையலாம்**

**தீப்பிடித்து இருவரும் உயிரிழக்க நேரலாம்**

சுனிதா மற்றும் வில்மோர் ஆகியோர் பூமிக்குத் திரும்புகையில் விண்கலம் பாதுகாப்பாக இறங்குவதை உறுதி செய்யத் தவறின் பாரிய ஆபத்துகளை எதிர்கொள்ள நேரிடும் என எச்சரிக் கப்பட்டுள்ளது,

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் (58) மற்றும் புட்ச் வில்மோர் (61) ஆகியோர் கடந்த மாதம் 5ஆம் திகதி ஸ்டார் லைனர் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் சென்றனர்.

அங்கு அவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் திட்டமிட்டபடி கடந்த 22ஆம் திகதி பூமிக்குத் திரும்பியிருக்க வேண்டும். ஆனால் ஸ்டார் லைனர் விண்கலத்தில் ஹீலியம் வாயுக்கசிவு மற்றும் உந்து விசை கருவியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பூமிக்குத் திரும்பு வதில் சிக்கல் உருவானது.

இதனால் நாசா விஞ்ஞானிகள் கவலை அடைந்தனர். இந்தப் பிரச் சினையால் கடந்த 50 நாட்களுக்கு மேலாக விண்வெளியில் சிக்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



இந்நிலையில், விண்வெளியில் சிக்கியுள்ளவர்கள் பூமிக்குத் திரும்பு வதில் உள்ள 3 சிக்கல்கள் குறித்து அமெரிக்க இராணுவ விண்வெளி அமைப்புகளின் முன்னாள் தளபதி ரூடி ரிடோல்ஃபி பேசியுள்ளார்.

பூமிக்கு விண்கலம் பாதுகாப்பாக இறங்குவதை உறுதிசெய்ய ஸ்டார்லை னர் சரியாக நிலைநிறுத்தப்பட வேண்டும். அதில் ஏதேனும் தவறு ஏற்பட்டால் பல ஆபத்தான விளைவுகள் ஏற்படலாம்.

1. 96 மணி நேர ஒக்சிஜன் விநியோ-கத்துடன் விண்வெளியில் விண்கலம் சிக்கிக் கொள்ளலாம்.

2. விண்கலம் பூமியின் வளிமண்ட லத்திற்குள் நுழையும் முயற்சி தோல்வி யடையலாம்.

3. விண்கலம் செங்குத்தான கோணத் தில் வளிமண்டலத்தில் நுழைந்தால் தரைப்பகுதியை அடைவதற்கு முன்பே தீப்பற்றி எரிந்து வீரர்கள் உயிரிழக்க நேரிடலாம் – என்று தெரிவித்தார்.




# உலகின் வயதான மூதாட்டி இறப்பு

# புதிய சாதனையாளர் தெரிவு!

உலகின் மிக வயதான பெண்மணி என்ற கின்னஸ் சாதனை படைத்த மரியா பிரான்யாஸ், தனது 117ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவில் பிறந்த மரியா பிரான்யாஸ், இரண்டு உலகப் போர்களைப் பார்த்தவர். அத்துடன், ஸ்பெயின் உள்நாட்டுப் போர், 1918 ஆம் ஆண்டு பெரிய அளவில் பரவிய காய்ச்சல் மற்றும் கோவிட் தொற்று ஆகியவற்றையும் பார்த்தவர் ஆவார்.

மரியா பிரான்யாஸ் 1907ஆம் ஆண்டு, மார்ச் 4ஆம் திகதி அமெரிக்காவின் சன் பிரான்சிஸ்கோவில் பிறந்தார். அதன்பின்னர் அவரது குடும்பம் சொந்த நாடான ஸ்பெயினுக்குக் குடிபெயர்ந்தது.

1931 இல் திருமணம் செய்துகொண்ட மரியாவுக்கு 3 குழந்தைகள், 11 பேரக் குழந்தைகள் மற்றும் 13 கொள்ளுப் பேரக் குழந்தைகள் உள்ளனர்.

வடகிழக்கு ஸ்பெயினில் உள்ள ஓலோட் நகரில் சாண்டா மரியா என்ற முதியோர் இல்லத்தில் வசித்து வந்த மரியா பிரான்யாஸ் நேற்றுமுன்தினம் (20) காலமானார்.

மரியா, தாம் விரும்பியபடியே தூக்கத்தில் அமைதியான முறையில் வலியில்லாமல் உயிரிழந்தார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

உலகின் மிக வயதான பெண்மணியான மரியா பிரன்யாஸ் உயிரிழந்ததையடுத்து, ஜப்பானைச் சேர்ந்த 116 வயதுடைய மூதாட்டியான தொமிக்கோ இதூக்கா உலகின் மிக வயதான பெண் மணியாக கின்னஸ் புத்தக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார்.

1908ஆம் ஆண்டு மே 23 இல் பிறந்த இதூக்கா, இளமைக்காலங்களில் மலையேற்ற வீராங்கனையாக இருந்துள்ளார். 3 பிள்ளைகளுக்குத் தாயாக இருக்கும் இதூக்கா, ஜப்பானின் வடக்குப் பகுதியில் உள்ள அசியா நகரில் வசித்து வருகிறார்.



பக்கங்கள் - 6

கனடா முரசு

வியாழக்கிழமை 22/08/2024

## நாடு கடத்தினால் உயிராபத்து கென்யா நாட்டவர் இறைஞ்சல்

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 22**

நாடு கடத்தப்படுவதை எதிர் கொண்டுள்ள கென்யாவைச் சேர்ந்த ஒருவர், கனடா தன்னை நான்கு நாள்களில் திருப்பி

C2




# கனடாவில் பல யூத நிறுவனங்களுக்கும் மின்னஞ்சலில் வெடிகுண்டு அச்சுறுத்தல்

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 22 கனடாவில் உள்ள நூறுக்கும் மேற்பட்ட யூத நிறுவனங்களுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல் மின்னஞ்சல்கள் வந்துள்ளமை கனடாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

**அதிக மக்கள்தொகை கொண்ட நகரங்களான டொரன்ரோ, மொன்றியல் மற்றும் நாட்டின் தலைநகரமான ஒட்டாவாவில் உள்ள மருத்துவமனைகள், ஜெப ஆலயங்கள் மற்றும் யூத மையங்கள் ஆகியவை இந்த இலக்குகளில் அடங்கும் என்று கூறப்படுகிறது.**

இதனைத் தொடர்ந்து, ஒட்டாவா பொலிஸார் பல மருத்துவமனைகளில் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டனர்.

இதுதொடர்பாக ராயல் கனேடியன் மவுண்டட் பொலிஸ் விசாரணையை முன்னெடுத்து வருவதாக ஒட்டாவா படை தெரிவித்தது.


மேலும் கனடா முழுவதும் RCMP விசாரணை நடத்தி வருகிறது. ஒட்டாவாவில் உள்ள the Queensway Carleton மருத்துவமனைக்கு மின்னஞ்சல் அனுப்பப்பட்டமையை அடுத்து விரிவான தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் எதுவும் கிடைக்கவில்லை என பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அதேபோல் ரொறன்ரோ பொலிஸாரும் கட்டடத் தேடுதலில் வெடிபொருள்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் கூறினர்.

கனேடிய யூத சமூகங்களில் அச்சத்தை ஏற்படுத்துவதே மின்னஞ்சல்களின் நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இது குறித்து தனது கோபத்தை வெளிப்படுத்தினார்.

அவர் தனது பதிவில், “கனடா முழுவதிலும் நூறுக்கும் மேற்பட்ட யூத நிறுவனங்கள் இன்று அச்சுறுத்தல்களால் குறிவைக்கப்பட்டன என வெளியான செய்திகளில் நான் வெறுப்படைகிறேன். இது அப்பட்டமான யூத விரோதம்“ எனத் தெரிவித்துள்ளார்.





# கனேடிய பொது ஊழியர் சங்கத்தில் அதன் துணைத் தலைவருக்கு எதிராகத் தீர்மானம்

**ஒன்ராரியோ, ஒகஸ்ட் 22**

கனேடிய பொது ஊழியர் சங்கம் தேசிய துணைத் தலைவர் ஃபிரெட் ஹான் சமீபத்தில் பகிர்ந்த சமூக ஊடகப் பதிவைத் தொடர்ந்து அவரது இராஜினாமாவைக் கோரும் ஒரு தீர்மானத்தை சங்கம் நிறைவேற்றியது.

750,000 உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கமான கியூப்பின் தேசிய செயற்குழு செவ்வாயன்று கூடி, நிறைவேற்றப்பட்ட பிரேரணையில், பிரெட் ஹான் தனது பொதுத் துணைத் தலைவராக தேசிய தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் திறனில் நம்பிக்கை இழந்துவிட்டதாகவும், அதன் விளைவாக அவர் அந்த பதவியில் இருந்து ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளது.

யூத உறுப்பினர்களை தனிமைப்படுத்துவதன் மூலம் யூத விரோதத்தை ஊக்குவிக்கின்றனர் எனவும், முறையான பாகுபாடுகளில் ஈடுபட்டனர் எனவும், கியூப் யூனியன் உறுப்பினர்கள் பலருக்கு எதிராக மனித உரிமைகள் முறைப்பாடு நவம்பரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.







## நாடு கடத்தினால்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பினால் தனது உயிருக்கு ஆபத்து நேரிடும் என்று அஞ்சுகிறார்.


48 வயதான சார்லஸ் முவாங்கி, கென்யாவில் உள்ள தனது வீட்டை விட்டு வெளியேறி, பாதுகாப்பைத் தேடி வந்தார்.

நேற்றைய தினம் அவரும் அவரது ஆதரவாளர்களும் அவரது உள்ளூர் நாடாளுமன்ற அலுவலகத்திற்கு வெளியே 2,000 கையெழுத்துகளுடன் ஒரு மனுவை வழங்கவும், அதைத் தடுக்கும் நம்பிக்கையில் உடனடி நாடு கடத்தலைப் பற்றி ஒரு கூட்டத்தை நடத்தவும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

'இது அரசாங்கம் பரிசீலிக்க வேண்டிய ஒன்று. இது வாழ்க்கை மற்றும் இறப்பு பற்றியது, நாங்கள் என் வாழ்க்கையைப் பற்றி பேசுகிறோம்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று குழந்தைகளின் தந்தையான அவர் 2019 இல் புகலிடம் கோரினார்.





# சிறுவர் நலக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக அறிவிப்பு

**ஒன்ராரியோ, ஒகஸ்ட் 22**

கனடாவில் சிறுவர் நலக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக அரசாங்கத்தின் சார்பில் கனடிய சிறுவர் நலன்புரித் திட்டம் அறிவித்தல் வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம் சிறுவர் நலன்புரி கொடுப்பனத் தொகை அதிகரிக்கப்பட்டது.

பண வீக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட்டது.

பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் பெற்றோருக்கு ஏற்படக்கூடிய பொருளாதார சுமைகளைக் கவனத்திற் கொண்டு அரசாங்கம் இவ்வாறு உதவி வழங்குகின்றது.

கனடாவில் வதியும் 18 வயதுக்கும் குறைந்த தகுதியான பெற்றோருக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

6 வயதுக்கும் குறைந்த ஒவ்வொரு பிள்ளைக்கும் 648.91 டொலர்களும், 6 வயது முதல் 17 வயது வரையிலான ஒவ்வொரு பிள்ளைக்கும் 547.50 டொலர்களும் வழங்கப்பட உள்ளன.

குடும்பத்தின் தேறிய வருமானத்தின் அடிப்படையில் சிறுவர் நலன்புரி உதவு தொகை நிர்ணயக்கப்பட உள்ளது.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் அரச உதவியை கோரும் இந்திய வம்சாவளி விவசாயிகள்!

**ஒன்ராரியோ, ஒகஸ்ட் 22**

பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவசாயிகள், கனடா அரசாங்கத்தின் உதவியை கோரியுள்ளனர்.

கடந்த மாதம் 90 ஆண்டுகளாக இயங்கி வந்த பிரிட்டிஷ் கொலம்பியா ட்ரீ ஃப்ஷரூட்ஸ் கூட்டுறவு நிறுவனம் திடீரென மூடப்பட்டதால், அவர்களின் விளைபொருள்களைச் சேமிப்பதும், பொதிபொருள் செய்யவும் இடம் இழந்துவிட்டனர்.

இக்கூட்டுறவின் மூடல் காரணமாக 230-க்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள், அதில் பலர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள், கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

இந்நிலையால் ஏற்கனவே கடுமையான காலநிலையின் விளைவாக மாம்பழம், அப்பிள், சார்பெரி போன்ற பயிர்கள் முற்றிலுமாக நாசமாகி, சமீபத்திய விளைபொருச்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

30 ஆண்டுகளாக கனடாவில் விவசாயம் செய்பவரும், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான மொடாலிவால், இந்த மூடலை எதிர்பாராத ஒன்று என கூறியுள்ளார்.

'விவசாயிகளிடமுள்ள அப்பிள்களை எங்கு வைத்துச் செல்ல வேண்டும் என்று தெரியவில்லை' என்று அவர் கவலையுடன் குறிப்பிட்டார்.

இந்த விவசாயிகள், மீண்டும் கூட்டுறவின் திறப்பை வலியுறுத்தி, அரசின் உதவியை நாடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரசு, விவசாயிகளின் சிரமங்களை உணர்ந்து, அவர்களுக்கு உடனடி நிதியுதவியை வழங்க வேண்டும் என்று எதிர்க்கட்சியான பிரிட்டிஷ் கொலம்பியா யுனைட்டட் கோரிக்கை வைத்துள்ளது.

இந்த விவசாயிகளுக்கு உதவியின்றி, அவர்கள் தங்களின் மரங்களை வேரோடு பிடுங்க வேண்டிய சூழல் உருவாகலாம் என்று விவசாயிகள் பயப்படுகிறார்கள்.



# கோ ரயில் சேவை இன்று மட்டுப்படுத்தப்படுகிறது!

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 22**

ரயில் வேலைநிறுத்தம் காரணமாக மில்டன் பாதையிலும் ஹாமில்டன் கோ நிலையத்திலும் கோ ரயில் சேவை இன்று இயங்காது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய அனைத்து கோ லைன்கள் மற்றும் யுபி எக்ஸ்பிரஸ் வியாழன் அன்று வழக்கமான சேவையை கொண்டிருக்கும் என்று குறிப்பிட்டு, பயணத்திற்கு முன் திட்டமிடுமாறு பயணிகளுக்கு கிரவுன் நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

இந்த வாரத் தொடக்கத்தில், டீம்ஸ்டர்ஸ் கனடா ரயில் மாநாடு – கனேடிய பசிபிக், கன்சாஸ் சிட்டி லிமிடெட் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் – ரயில்வேக்கு வேலைநிறுத்த அறிவிப்பை வழங்கியதாகக் கூறியது.



# விபத்தில் சிறுமியைக் கொன்ற மூதாட்டிக்கு இரு வருடங்கள் வீட்டுக் காவல் தண்டனை!

**ஒன்ராரியோ, ஓகஸ்ட் 22**

எட்டு வயது சிறுமியை விபத்தின் மூலம் கொலை செய்த குற்றத்திற்காக 79 வயதான பெண் ஒருவருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோவின் லண்டன் நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்துள்ளது.

இந்தப் பெண் வாகனம் ஒன்றினால் மோதி எட்டு வயதுச் சிறுமியையும் வேறும் சிலரையும் மோதினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் எட்டு வயது சிறுமி உயிர் இழந்தமையுடன் மேலும் சிலர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நடைபெற்ற வழக்கு விசாரணைகளில் அந்த மூதாட்டிக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பெட்ரோனெல்லா மெக்னோர்கன் என்ற பெண்ணுக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெண் இரண்டு ஆண்டுகளுக்கு வீட்டு காவலில் இருக்க வேண்டும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு வாகனம் செலுத்த முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கவனயீனமாக வாகனத்தை செலுத்தி உடல் ரீதியான தீங்கு விளைவித்தார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அந்தப் பெண் வீட்டிலேயே இருக்க வேண்டும் எனவும் வாரத்தின் வியாழக்கிழமை நாள்களில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரையிலான கால பகுதியில் மட்டும் அத்தியாவசிய பொருள்களை கொள்ளளவு செய்வதற்கு வெளியே செல்ல முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமைகளில் தேவாலயத்திற்கு செல்ல முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# மேலும் மனிதாபிமான உதவிகளை உக்ரேனுக்கு வழங்குகிறது கனடா!

உக்ரேனுக்கு மனிதாபிமான அடிப்படையில் கனடிய அரசாங்கம் 5.7 மில்லியன் டொலர்களை உக்கிரேனுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளது.

கனடாவின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் அகமட் உசேன் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

உக்கிரேனிய மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக இந்த உதவி வழங்கப்படுவதாக அவர் அறிவித்துள்ளார்.

ரஷ்யாவுடனான போர் ஆரம்பிக்கப்பட்டு சுமார் இரண்டரை ஆண்டுகள் கடக்கும் நிலையில் இந்த உதவி குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹுசெய்ன் உக்கிரேனுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

உக்ரேனிய சிறுவர் மருத்துவமனைகளுக்கு அவர் விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான நீர், தங்குமிட வசதிகள், சிறுவர் பாதுகாப்பு, பால் நிலை அடிப்படையிலான வன்முறைகளை தடுத்தல் போன்றவற்றுக்கு இந்த உதவி வழங்கப்பட உள்ளதாக கனடா அறிவித்துள்ளது.

இந்த ஆண்டில் உக்கிரேனுக்கு கனடிய அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் 28.2 மில்லியன் டொலர் உதவிகளை வழங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து கனடிய அரசாங்கம் இந்த நிதியை வழங்கி உதவுகின்றது.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் உக்கிரேனில் மனிதாபிமான பணிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணைக் காப்பாற்றுவதற்காக மூன்று நாய்கக் சுட்டுக் கொலை!

கனடாவின் ஹாலிபெக்ஸ் பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மூன்று நாய்களை சுட்டுக் கொன்றுள்ளார்.

பெண் ஒருவரை தாக்க வந்த நாய்கள் மீது இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

பெண்ணை காப்பாற்ற முயற்சித்த போது அந்த நாய்கள் பொலிஸ் உத்தியோகத்தரையும் கடிக்க முயற்சித்துள்ளன.

இதனால் பொலிஸ் உத்தியோகத்தர் அந்த நாய்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

இதனால் மூன்று நாய்களும் கொல்லப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. நாய் கடிக்கு இலக்கான பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.




இந்த சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தருக்கு காயங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர்களை மட்டுப்படுத்த கியூபெக் மாகாணம் முடிவு!

கனேடிய மாகாணமொன்றில் பணியாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையிலும், புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்த முடிவு செய்துள்ளார், அம்மாகாண முதல்வர்.

கனடாவில் சிறு தொழில்கள், ஏற்கனவே பணியாளர் தட்டுப்பாடு, நிதி உதவி பிரச்சினை முதலான பிரச்சினைகளில் சிக்கித் தவித்துவருகின்றன என்று கூறியுள்ளது, கனடியன் ஃபெடரேஷன் ஆஃப் இன்டிபென்டன்ட் பிசினஸ் (CFIB) அமைப்பு.

ஆனால், பணியாளர்கள் தட்டுப்பாடு நிலவும் நிலையிலும், புலம்பெயர்தலை கட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளார் கியூபெக் மாகாண முதல்வரான François Legault.



கியூபெக் மாகாணத்தில், வேகமாகவும், கணிசமான அளவிலும் தற்காலிக பணியாளர்கள் எண்ணிக்கையை குறைக்க அம்மாகாண அரசு முடிவு செய்துள்ளது.

குறிப்பாக, மொன்றியலில் ஏற்கனவே சுமார் 12,000 தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர்கள் இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ள முதல்வர், அதனால், கல்வி, சுகாதாரம் மற்றும் குடியிருக்க வீடுகள் ஆகிய சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

ஆகவே, அடுத்த மாதம், அதாவது, செப்டம்பர் மாதம் முதல், ஆறு மாதங்களுக்கு புதிதாக தற்காலிக வெளிநாட்டுப் பணியாளர்கள் பணிக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

அத்துடன், ஏற்கனவே பணியிலிருப்போரின் பணி புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கும் இந்த தற்காலிக தடை பொருந்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், குறிப்பிட்ட சில கல்வி நிறுவனங்களில் வெளிநாட்டு மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கைக்கு கட்டுப்பாடு விதிக்கவும் தனது அரசு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# றொறன்ரோவில் கார் கொள்ளை தொடர்பில் தகவல்களை வழுங்குவோருக்குச் சன்மானம்

கனடாவின் றொறன்ரோவில் கார் கொள்ளை தொடர்பிலான தகவல்களை வழங்குவோருக்கு சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

குற்றத் தடுப்பாளர்களினால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கார் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களை அடையாளம் கண்டு கைது செய்வதற்கு உதவக் கூடிய தகவல்களை வழங்குவோருக்கு இவ்வாறு சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தகவல் வழங்குவதற்கு 5000 டொலர்கள் வரையில் சன்மானம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் இந்த சன்மானம் வழங்கும் நடைமுறை அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக எதிர்வரும் செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையில் இந்த சன்மானம் வழங்கும் நடைமுறை அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

கார்கொள்ளை சம்பவங்கள் தொடர்பில் தகவல்கள் இருந்தால் அதனை பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் ஒவ்வொரு 40 நிமிடங்களுக்கு ஒரு தடவையும் றொறன்ரோவில் வாகனம் ஒன்று களவாடப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டில் வாகன கொள்ளை சம்பவங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது சற்றே குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கார் கொள்ளைச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காக இவ்வாறு சன்மானம் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# றொறன்ரோவில் கார்க் கொள்ளையுடன் தொடர்புடைய பதின்ம வயதினர் கைது

கனடாவின் றொன்ரோ நகரில் கார் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டு பதின்ம வயதினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த ஒகஸ்ட் மாதம் 14 ஆம், 15 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மூன்று சந்தேக நபர்கள் வீடு ஒன்றை உடைத்து கார் ஒன்றை அபகரித்துச் செல்ல முயற்சி செய்துள்ளனர்.

எனினும் அந்த முயற்சி வெற்றி அளிக்கவில்லை. பின்னர் மறுநாள் வாகன தரிப்பிடத்தில் வைத்து கத்தி முனையில் வாகன உரிமையாளரை மிரட்டி வாகனத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் 19 வயதான மோஹித் போல் மற்றும் 17 வயதான சிறுவன் ஒருவனையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இருவருக்கு எதிராகவும் வழக்கு தொடரப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்றாவது நபர் தேடப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.